## ENGLISH REPORTER AND TAMIL REPORTER IN TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY SECRETARIAT SERVICE

1. Assertion (A): B.R Ambedkar launched Mahad Satyagraha
   Reason (R): He wanted to Unite Hindus and Muslims
   a. (A) is correct (R) explains (A)
   b. (A) is correct (R) does not explain
   **c. (A) is correct (R) is wrong**
   d. (A) is wrong (R) is correct
   e. Answer not known
   கூற்று (A): பி.ஆர். அம்பேத்கர் மஹத் சத்தியாகிரகத்தைத் தொடங்கினார்.
   காரணம் (R): இவர் இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களை ஒருங்கிணைக்க முயன்றார்.
   a. (A) கூற்று சரி (R) காரணம் கூற்றை விளக்குகிறது.
   b. (A) கூற்று சரி (R) காரணம் கூற்றை விளக்கவில்லை
   c. (A) கூற்று சரி (R) காரணம் தவறு
   d. (A) கூற்று தவறு (R) காரணம் சரி
   e. விடை தெரியவில்லை

2. Aurobindo Ghosh was defended in the Alipore Bomb case by
   **a. C.R. Das** b. Motilal Nehru c. Bhula Bhai Desai
   d. Bipin Chandra Pal e. Answer not known
   அலிபூர் குண்டு வெடிப்பு வழக்கில் அரவிந்த கோஷ்க்காக வழக்கை வாதாடியவர்
   a. C.R. தாஸ் b. மோதிலால் நேரு c. புலாபாய் தேசாய்
   d. பிபின் சந்திர பால் e. விடை தெரியவில்லை

3. The famous quote "Long years ago we made a tryst with destiny" was given by
   a. Dr. B.R. Ambedkar **b. PK. Jawaharlal Nehru** c. Mahatma Gandhi
   d. Abul Kalam Azad e. Answer not known
   புகழ் பெற்ற மேற்கொள்ள "நீண்ட ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் விதியுடன் முயற்சி செய்தோம்" யாரால் வழங்கப்பட்டது?
   a. டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் b. ஜவஹர்லால் நேரு
   c. மகாத்மா காந்தி d. அபுல் கலாம் ஆசாத்
   e. விடை தெரியவில்லை

4. What is the land ceiling limit under the Madras Land Reforms Act of 1961?
   **a. 30 Standard acres** b. 50 Standard acres c. 40 standard acres
   d. 55 standard acres e. Answer not known
   கி.பி. 1961-ம் ஆண்டு மெட்ராஸ் நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ், நில உச்சவரம்பு என்ன?
   a. 30 நிலையான ஏக்கர் b. 50 நிலையான ஏக்கர் c. 40 நிலையான ஏக்கர்
   d. 55 நிலையான ஏக்கர் e. விடை தெரியவில்லை

5. 1. The Civil rebellions began as British rule was established in Bengal and Bihar and they occurred in area after area as it was incorporated into colonial rule.
2. There were more than forty major rebellions apart from hundreds of minor one.
Which of the above statement/s is/are true?
a. 1 only b. 2 only **c. Both 1 and 2**
d. None of the above e. Answer not known
1. வங்காளம் மற்றும் பீகாரில் பிரிட்டிஷ் ஆட்சி நிறுவப்பட்டதால் உள்நாட்டுக் கிளர்ச்சிகள் தொடங்கின. மேலும் அவை காலனித்துவ ஆட்சியில் ஒன்றன்பின் ஒன்றாக இணைக்கப்பட்டதால் அவை நிகழ்ந்தன.
2. நூற்றுக்கணக்கான சிறிய கிளர்ச்சிகளைத் தவிர நாற்பதுக்கும் மேற்பட்ட பெரிய கிளர்ச்சிகள் நடந்தன.
மேலே காணப்படும் கூற்றுகளில் சரியானது/வை எது/எவை?
a. 1 மட்டும் b. 2 மட்டும் c. 1 மற்றும் 2 ஆகியன
d. மேற்கண்ட எவையுமில்லை e. விடை தெரியவில்லை

6. Name the British Prime Minister who announced the Communal Award on 17th August 1932?
**a. Ramsay Mcdonald** b. Lloyd George c. Stanley Baldwin
d. A.V. Alexander e. Answer not known
1932 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17 ஆம் நாள் வகுப்புவாத கொடையை அறிவித்த பிரிட்டிஷ் பிரதம மந்திரி யார் என்பதைக் குறிப்பிடவும்.
a. ராம்சே மெக்டொனால்ட் b. லாய்ட் ஜார்ஜ் c. ஸ்டான்லி பால்டுவின்
d. A.V. அலெக்ஸாண்டர் e. விடை தெரியவில்லை

7. Match List I with List II and select the correct answer using the codes given below:

| List I | List II |
|---|---|
| A. Vinoba Bhave | 1. Police Action |
| B. Nethaji | 2. Noakhali |
| C. Nizam of Hyderabad | 3. Satyagrahi |
| D. Gandhiji | 4. Azad Hind Fauj |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a.** | **3** | **4** | **1** | **2** |
| b. | 1 | 4 | 3 | 2 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 2 | 1 | 4 | 3 |

e. Answer not known

பின்வரும் பட்டியல் I-ஐ பட்டியல் II உடன் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. வினோபா பாவே | 1. போலிஸ் நடவடிக்கை |
| B. நேதாஜி | 2. நாவகாளி |
| C. ஐதராபாத் நிஸாம் | 3. சத்தியாகிரகி |
| D. காந்திஜி | 4. ஆசாத் இந்து பாஜ் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a.** | **3** | **4** | **1** | **2** |
| b. | 1 | 4 | 3 | 2 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 2 | 1 | 4 | 3 |

e. விடை தெரியவில்லை

8. Who was considered to be the first – social reformer to appear in Modern Tamil Nadu?
a. Vallalar **b. Vaigunda Swamigal** c. Periyar
d. Ayothi Dasar e. Answer not known
நவீன தமிழகத்தில் தோன்றிய முதல் சமூக சீர்திருத்தவாதியாகக் கருதப்படுபவர் யார்?
a. வள்ளலார் b. வைகுண்டசுவாமிகள் c. பெரியார்
d. அயோத்தி தாசர் e. விடை தெரியவில்லை

9. Which among the following were the causes for the out break of Vellore Mutiny in 1806?
a. Use of animal fat greezed bullet, poor salary, New turban, caste marks and earrings clean shaving.
b. No Promotion, Heavy Punishments, Poor Salary, New Turban, Clean Shaving.
c. Use of animal fat greezed bullet, No Promotion, New Turban, Poor Salary, Clean Shaving.
**d. No Promotion, Poor salary, New Turban, Castemarks and Earrings, Clean Shaving**
e. Answer not known
பின்வருவனவற்றுள் எவை, 1806-ஆம் ஆண்டு நடைபெற்ற வேலூர் சிப்பாய் கலகத்திற்கான காரணங்கள் ஆகும்?
a. மிருகங்களின் கொழுப்பு பூசப்பட்ட தோட்டாக்கள், குறைவான சம்பளம், புதிய வகை தலைப்பாகை, சாதிக்குறியீடுகள் மற்றும் காதணிகள், சுத்தமாக தாடையை மழித்தல்.
b. பதவி உயர்வின்மை, கடினமாக தண்டனை, குறைவான சம்பளம், புதியவகை தலைப்பாகை, சுத்தமாக தாடையை மழித்தல்
c. மிருகங்களின் கொழுப்பு பூசப்பட்ட தோட்டாக்கள், பதவி உயர்வின்மை, புதிய வகை தலைப்பாகை, குறைவான சம்பளம், சுத்தமாக தாடையை மழித்தல்
d. பதவி உயர்வின்மை, குறைவான சம்பளம், புதிய வகை தலைப்பாகை, சாதிக்குறியீடுகள் மற்றும் காதணிகள், சுத்தமாக தாடையை மழித்தல்
e. விடை தெரியவில்லை

10. The name of the script used in the Sangam Age was
a. Kharusthi b. Devanagiri **c. Tamil – Brahmi**
d. Grantha e. Answer not known
சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்து வடிவத்தின் பெயர் யாது?
a. கரோஷ்தி b. தேவநாகரி c. தமிழ்ப் - பிராமி
d. கிரந்தம் e. விடை தெரியவில்லை

11. Thirukural is one of the great poetry of our literature. It answers all questions relating to life ethics, social, political, economics and education etc. If we give a proper interpretation. It is so popular that it has been translated into many languages in and around world.
Which of the following is best implied in the passage?
a. Thirukural is a collection of answers to all questions
b. Thirukural is a religious book
c. Thirukural is a prose
d. Thirukural is a compendium of knowledge
e. Answer not known

திருக்குறள் நம் இலக்கியங்களில் தலைசிறந்த ஒன்று, வாழ்க்கை நெறிமுறைகள், சமூகம், அரசியல், பொருளாதாரம் மற்றும் கல்வி போன்ற அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கிறது. மிகவும் பிரபலமான திருக்குறள் பல மொழிகளில் உலகளவில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
பின்வருவனவற்றில் எது சிறப்பாக பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

a. அனைத்து வினாக்களுக்குமான பதில்களின் தொகுப்பாகத் திருக்குறள் உள்ளது
b. திருக்குறள் ஒரு சமயநூல்
c. திருக்குறள் ஓர் உரைநடை
d. திருக்குறள் ஓர் அறிவுசார்ந்த தொகுப்பு
e. விடை தெரியவில்லை

12. Which among the following Political Party introduced co-education system at primary level in Tamil Nadu?
a. Dravida Munnetra Kazhagam
b. All India Anna Dravida Munnetra Kazhagam
c. Dravida Kazhagam
**d. Justice Party**
e. Answer not known
பின்வருவனவற்றுள் எந்த அரசியல் கட்சி தமிழகத்தில் ஆரம்பக் கல்வியில் இருபாலர் கல்வி முறையை அறிமுகப்படுத்தியது?
a. திராவிட முன்னேற்ற கழகம் b. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம்
d. திராவிட கழகம் d. நீதிக் கட்சி e. விடை தெரியவில்லை

13. The Erode plan of E.V. Ramasamy consist of the following:
1. Extension of Life Insurance for all
2. Free education for all
3. Abolition of untouchability
4. Nationalisation of essential Industrial Factor

a. 1 only b. 2 only c. 1, 2 only
**d. 1, 2, 3, 4** e. Answer not known

ஈ.வே.ராமசாமியின் ஈரோட்டு திட்டம் கீழ்கண்டவைகளில் எதை கொண்டிருந்தது?
1. அனைவருக்கும் ஆயுள் காப்பீட்டு திட்டத்தை விரிவுபடுத்துதல்
2. அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி அளித்தல்
3. தீண்டாமை ஒழிப்பு
4. அத்தியாவசிய தொழில்களை நாட்டுடமை ஆக்குதல்

a. 1 மட்டும் b. 2 மட்டும் c. 1, 2 மட்டும்
d. 1, 2, 3, 4 e. விடை தெரியவில்லை

14. Who published 'Kudi Arasu'?
**a. Periyar** b. Anna c. Singaravelar
d. E.V.K. Sambath e. Answer not known
'குடியரசு' நாளிதழை வெளியிட்டவர் யார்?
a. பெரியார் b. அண்ணா c. சிங்காரவேலர்
d. E.V.K. சம்பத் e. விடை தெரியவில்லை

15. "Irunthamizhil̅e Unn̅al irunth̅en imay̅or
Virunthamizhtham Yendr̅alum V̅end̅en!"
O! Everthing Tamil!
I am living by you. If the Heavely
Elixir comes to me, I will not like if'

Which Dhoothu book contains these verbes?
a. Kāakkai Vidu Thoothu **b. Tamil Vidu Thoothu** c. Nenju Vidu Thoothu
d. Megavidu Thoothu e. Answer not known
"இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ் தம் என்றாலும் வேண்டேன்"
என்ற பாடல் வரிகள் இடம்பெறும் தூது நூல் எது?
a. காக்கை விடு தூது b. தமிழ் விடு தூது c. நெஞ்சு விடு தூது
d. மேக விடு தூது e. விடை தெரியவில்லை

16. From where did Manimegalai get the Amudhasurabhi?
a. Vuvavanam **b. Manipallavatheevu** c. Kaviripoompattinam
d. Vanji Maanagar e. Answer not known
மணிமேகலைக்கு அமுதசுரபி என்ற அட்சய பாத்திரம் எங்கே கிடைத்தது?
a. உவவனம் b. மணி பல்லவத்தீவு c. காவிரிப்பூம்பட்டினம்
d. வஞ்சி மாநகர் e. விடை தெரியவில்லை

17. "Poomadanthai Vazhap Puvimadanthai Veetriruka
Namadanthai Nool Vaakkum Nal"
For whom does Vaanidasan mourn in these lines?
**a. Kambar** b. Kannadasan c. Annadurai
d. Kalaignar M. Karunanithi e. Answer not known
"பூ மடந்தை வாழப் புவிமடந்தை வீற்றிருக்க
நாமடந்தை நூல் வாக்கும் நாள்" என்று
வாணிதாசன் யார் இறந்ததை எண்ணிப் பாடியுள்ளார்?
a. கம்பர் b. கண்ணதாசன் c. அண்ணாதுரை
d. கலைஞர். மு. கருணாநிதி e. விடை தெரியவில்லை

18. Who was awarded the Shakithya Academy award for the Book "Puthiya Dharisanangal'?
a. Prapanjan b. Ashoka Mithran c. Rajam Krishnan
**d. Ponneelan** e. Answer not known
"புதிய தரிசனங்கள்" என்ற நூலுக்கு சாகித்திய அகாடெமி விருது பெற்றவர் யார்?
a. பிரபஞ்சன் b. அசோகமித்திரன் c. இராஜம்கிருணன்
d. பொன்னீலன் e. விடை தெரியவில்லை

19. Which great work preceding Thirukkural praises the needs of water as "Neerindri Amaiyadhu Ulagu"?
a. Paripaadal **b. Nattrinai** c. Kuruntogai
d. Tolkaapiyam e. Answer not known
"நீரின்றி அமையாது உலகு" என்று திருக்குறளுக்கு முன்பே கூறிய நூல் எது?
ய. பரிபாடல் **b. நற்றிணை** c. குறந்தொகை
d. தொல்காப்பியம் e. விடை தெரியவில்லை

20. Madurai Kaanji Talks about people of which ecosystem?
a. Kurinji b. Mullai **c. Marutham**
d. Neithal e. Answer not known
மதுரைக் காஞ்சி எந்த நில மக்களின் வாழ்வியலைக் கூறுகிறது?
a. குறிஞ்சி b. முல்லை c. மருதம்
d. நெய்தல் e. விடை தெரியவில்லை

21. In which place the poetries of Sangam Literature have been categorized by Sangam poets?
   **a. Madurai** b. Trichy c. Karur
   d. Poompuharpattinam e. Answer not known
   சங்கப்புலவர்கள் தங்கள் கவிதைகளை எங்கே வகைப்படுத்தினர்?
   a. மதுரை b. திருச்சி c. கரூர்
   d. பூம்புகார்பட்டினம் e. விடை தெரியவில்லை

22. From which text are these likes taken
   "Pulam mikkavarai pulamai therithal
   Pulam mikkavarkke pulanam"?
   a. Naladiyar b. Naanmanikadigai c. Thirukkural
   **d. Palamozhi** e. Answer not known
   "புலம் மிக்கவரைப் புலமை தெரிதல்
   புலம் மிக்கவர்க்கே புலனாம்" என்ற
   ஆடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?
   a. நாலடியார் b. நான்மணிக்கடிகை c. திருக்குறள்
   d. பழமொழி e. விடை தெரியவில்லை

23. The MGNREGA was first launched in the year
   a. 2005 **b. 2006** c. 2008 d. 2009 e. Answer not known
   மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டம் (MGNREGA) முதல் முதலில் தொடங்கப்பட்ட ஆண்டு
   a. 2005 **b. 2006** c. 2008 d. 2009 e. விடை தெரியவில்லை

24. Tamil Nadu Integrated Nutrition Programme was introduced by
   a. Dr. M. Karunanidhi **b. Dr. M.G. Ramachandran** c. Dr. J. Jeyalalitha
   d. Mr. C.N. Annadurai e. Answer not known
   தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டமானது _____ அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.
   a. Dr. மு.கருணாநிதி b. Dr. M.G. ராமச்சந்திரன் c. Dr. ஜெ. ஜெயலலிதா
   d. திரு. C.N. அண்ணாதுரை e. விடை தெரியவில்லை

25. Which city is known as Knitting City in Tamil Nadu?
   a. Coimbatore b. Erode **c. Tiruppur**
   d. Sivakasi e. Answer not known
   தமிழ்நாட்டில் 'பின்னலாடை நகரம்' என்று அழைக்கப்படுவது எது?
   a. கோயம்புத்தூர் b. ஈரோடு c. திருப்பூர்
   d. சிவகாசி e. விடை தெரியவில்லை

26. Why Coimbatore is called as Manchester of South India?
   a. Due to more number of Electric Motors are produced
   b. Due to the functioning of More Textile Mills
   c. Due to the functioning of more number of Educational Institutions
   d. Due to the functioning of more jewellery manufacturing units
   e. Answer not known

கோயம்புத்தூர், தென் இந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுவதன் காரணம் என்ன?

a. அதிக எண்ணிக்கையிலான மின் மோட்டார்கள் உற்பத்தி செய்யப்படுவதால்
b. அதிக எண்ணிக்கையிலான துணி ஆலைகள் செயல்படுவதால்
c. அதிக கல்வி நிறுவனங்கள் உள்ளதால்
d. அதிக அளவிலான நகை உற்பத்தி நிறுவனங்கள் உள்ளதால்
e. விடை தெரியவில்லை

27. Which Chennai is called as "Detroit of Asia"?
a. Due to the presence of Textile Industry
**b. Due to the presence of Automobile Industry**
c. Due to the presence of Leather Industry
d. Due to the presence of Film Industry
e. Answer not known

"ஆசியாவின் டெட்ராய்ட்" என்று சென்னை ஏன் அழைக்கப்படுகிறது?

a. ஜவுளித் தொழிலால்
b. மோட்டார் வாகனத் தொழிலால்
c. தோல் தொழிலால்
d. திரைப்படத் தொழிலால்
e. விடை தெரியவில்லை

28. As per 2011 Census the density of population in Tamil Nadu was
a. 384 per sq.kilo meter
b. 425 per sq.kilo meter
**c. 555 per sq.kilo meter**
d. 561 per sq.kilo meter
e. Answer not known

2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி தமிழ்நாட்டில் மக்கள்தொகை அடர்த்தி

a. 384 per sq.kilo meter
b. 425 per sq.kilo meter
**c. 555 per sq.kilo meter**
d. 561 per sq.kilo meter
e. விடை தெரியவில்லை

29. The measurement of multi-dimensional poverty index is based on ____.
**a. Health, Education and Living Standard**
b. Education and Health
c. Nutrition and Longevity
d. National Income and Rich men
e. Answer not known

பன்முக ஏழ்மை குறியீட்டை அளவிடும் முறை ______ ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.

a. சுகாதாரம், கல்வி மற்றும் வாழ்க்கைத் தரம்
b. கல்வி மற்றும் சுகாதாரம்
c. சத்துணவு மற்றும் நீள்வாழ்வு
d. தேசிய வருமானம், பணக்காரர்
e. விடை தெரியவில்லை

30. According to Tamil Nadu Human Development Report (2017) ______ District is ranked first position.
**a. Kanyakumari**
b. Ariyalur
c. Kancheepuram
d. Chennai
e. Answer not known

தமிழ்நாடு மாநில மனித மேம்பாட்டு அறிக்கை 2017இன் படி ______ மாவட்டம் முதல் இடத்தில் இருக்கின்றது.

a. கன்னியாகுமரி
b. அரியலூர்
c. காஞ்சிபுரம்
d. சென்னை
e. விடை தெரியவில்லை

31. The Public Grievance Day is conducted in Tamil Nadu.
a. Every Wednesday
b. Every Friday
c. Every Saturday
**d. Every Monday**
e. Answer not known

தமிழ்நாட்டில் ______ நாள் பொது மக்களின் குறைகளை நீக்கும் நாள்
a. ஒவ்வொரு புதன்கிழமை b. ஒவ்வொரு வெள்ளிக்கிழமை
c. ஒவ்வொரு சனிக்கிழமை d. ஒவ்வொரு திங்கள்கிழமை
e. விடை தெரியவில்லை

32. In present situation _____ are the longest sources of irrigation in Tamil Nadu.
a. Tanks irrigation **b. Wells irrigation** c. Tube wells irrigation
d. Canals irrigation e. Answer not known
தற்பொழுது உள்ள நிலவரப்படி தமிழ்நாட்டில் _______ பாசனம் அதிக அளவில் உள்ளது.
a. அணைக்கட்டுகள் பாசனம் b. கிணறுகள் பாசனம்
c. குழாய் கிணறுகள் பாசனம் d. கால்வாய்கள் பாசனம்
e. விடை தெரியவில்லை

33. A dozen bananas cost Rs.20. Then the number of bananas that can be bought for Rs. 100 is
a. 5 b. 12 c. 20 **d. 60** e. Answer not known
ஒரு டஜன் வாழைப்பழத்தின் விலை ரூ.20 எனில் ரூ.100க்கு வாங்கப்படும் வாழைப்பழங்களின் எண்ணிக்கை
a. 5 b. 12 c. 20 **d. 60** e. விடை தெரியவில்லை

34. Find the difference in compound interest and simple interest for p=Rs. 8,000, r = 5% p.a. and n = 3years.
**a. Rs. 61** b. Rs. 661 c. Rs. 1061
d. Rs. 1261 e. Answer not known
p = 8,000 ரூ., ஆண்டு வட்டி வீதம் r = 5%, n = 3 ஆண்டுகள் எனில், கூட்டு வட்டிக்கும், தனிவட்டிக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை காண்க.
a. Rs. 61 b. Rs. 661 c. Rs. 1061
d. Rs. 1261 e. விடை தெரியவில்லை

35. If $A = 2^{65}$ and $B = 2^{64} + 2^{63} + 2^{62} + \dots + 2^0$ which of the following is true?
a. B is larger than A by 1 b. B is $2^{64}$ more than A
c. A and B are equal **d. A is larger than B by 1**
e. Answer not known
$A = 2^{65}$ மற்றும் $B = 2^{64} + 2^{63} + 2^{62} + \dots + 2^0$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. பின்வருவனவற்றில் எது உண்மை?
a. B ஆனது A-ஐ விட 1 அதிகம் b. B ஆனது A-ஐ விட $2^{64}$ அதிகம்
c. A மற்றும் B சமம் d. A ஆனது B-ஐ விட 1 அதிகம்
e. விடை தெரியவில்லை

36. How many two digit numbers are divisible by 13?
a. 6 **b. 7** c. 8 d. 9 e. Answer not known
13 ஆல் வகுபடும் ஈரிலக்க எண்களின் எண்ணிக்கையைக் காண்க.
a. 6 **b. 7** c. 8 d. 9 e. விடை தெரியவில்லை

37. If a clock strikes once at 1'o Clock twice at 2'o clock thrice at 3'o clock and so on, how many times will it strike in a day
a. 78 **b. 156** c. 234 d. 312 e. Answer not known

ஒரு கடிகாரம் ஒரு மணிக்கு ஒரு முறை, 2 மணிக்கு இரு முறை, 3 மணிக்கு மூன்று முறை என்றவாறு தொடர்ந்து சரியாக ஒவ்வொரு மணிக்கும் ஒலி எழுப்பும் எனில், ஒரு நாளில் அக்கடிகாரம் எத்தனை முறை ஒலி எழுப்பும்?

a. 78 **b. 156** c. 234 d. 312 e. விடை தெரியவில்லை

38. 5 1 4 7 3 9 8 5 7 2 6 3 1 5 8 6 3 8 5 2 2 4 3 4 9 6

How many odd numbers are there in the sequence which are immediately followed by an odd number?

a. 1 b. 2 c. 3 **d. More than 4** e. Answer not known

5 1 4 7 3 9 8 5 7 2 6 3 1 5 8 6 3 8 5 2 2 4 3 4 9 6

இத்தொடர் வரிசையில் ஒரு ஒற்றை எண்ணைத் தொடரும் எத்தனை ஒற்றை எண்கள் உள்ளன?

a. 1 b. 2 c. 3 **d.** 4க்கு மேல் e. விடை தெரியவில்லை

39. The house of a street are numbered from 1 to 49. Senthil's house is numbered such that the sum of numbers of the house prior to Senthil's house is equal to the sum of numbers of the houses following Senthil's house. Find Senthil's house number?

**a. 35** b. 25 c. 30 d. 20 e. Answer not known

ஒரு தெருவில் உள்ள வீடுகளுக்கு 1 முதல் 49 வரை தொடர்ச்சியாக கதவிலக்கம் வழங்கப்பட்டுள்ளது. செந்திலின் வீட்டிற்கு முன்னதாக உள்ள வீடுகளின் கதவிலக்கங்களின் கூட்டுத்தொகையானது செந்திலின் வீட்டிற்குப் பின்தாக உள்ள வீடுகளின் கதவிலக்கங்களின் கூட்டுத் தொகைக்குச் சமம் எனில் செந்திலின் வீட்டு கதவிலக்கத்தைக் காண்க.

**a. 35** b. 25 c. 30 d. 20 e. விடை தெரியவில்லை

40. A person saved money every year, half as much as he could in the previous year. If he had totally saved Rs. 7,875 in 6 years then how much did he save in the first year?

a. Rs. 3,800 b. Rs. 3,725 **c. Rs. 4,000**
d. Rs. 4,200 e. Answer not known

ஒரு நபர் ஒவ்வோர் ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டு சேமித்த தொகையில் பாதியைச் சேமிக்கிறார். 6 ஆண்டுகளில் அவர் ரூ. 7875 ஐ சேமிக்கிறார் எனில், முதல் ஆண்டில் அவர் சேமித்த தொகை எவ்வளவு?

a. Rs. 3,800 b. Rs. 3,725 **c. Rs. 4,000**
d. Rs. 4,200 e. விடை தெரியவில்லை

41. If A is an event of a random experiment such that $P(A) : P(\bar{A}) = 17 : 15$ and $n(s) = 640$. Then find $n(A)$.

a. 320 b. 340 c. 305 d. 310 e. Answer not known

ஒரு சமவாய்ப்பு சோதனையில் A என்ற ஒரு நிகழ்ச்சியில் $P(A) : P(\bar{A}) = 17 : 15$ மற்றும் என்றவாறு கொடுக்கப்பட்டுள்ளது எனில் $n(A)$ காண்க.

a. 320 b. 340 c. 305 d. 310 e. விடை தெரியவில்லை

42. A and B together can complete a piece of work in 4 days. If A alone can complete the same work in 12 days in how many days can B alone complete that work?

a. 4 days b. 5 days **c. 6 days**
d. 7 days e. Answer not known

A-யும், B-யும் சேர்ந்து ஒரு வேலையை 4 நாட்களில் முடிப்பர். A மட்டும் தனியாக அவ்வேலையை 12 நாட்களில் முடிப்பார் எனில் B மட்டும் தனியாக அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்?

a. 4 நாட்கள் b. 5 நாட்கள் c. 6 நாட்கள்
d. 7 நாட்கள் e. விடை தெரியவில்லை

43. X, Y and Z can do a piece of job in 4, 6 and 10 days respectively. If X, Y and Z work together to complete, then they are paid Rs. 31,000 on the whole. Then find the separate shares of X, Y and Z?

a. 6,000 ; 10,000 ; 15,000 b. 10,000 ; 6,000 ; 15,000
c. 10,000 ; 15,000 ; 6,000 **d. 15,000 ; 10,000 ; 6,000**
e. Answer not known

X, Y மற்றும் Z ஆகியோர் ஒரு வேலையை முறையே மற்றும் நாட்களில் 4, 6 மற்றும் 10 நாட்களில் முடிப்பர். மூவரும் ஒன்று சேர்ந்து அந்த வேலையை முடித்தால் அவர்களுக்கு ரூ. 31,000 வழங்கப்படும் எனில் X, Y மற்றும் Z தனித்தனியேப் பெறும் பங்குகள் காண்க?

a. 6,000 ; 10,000 ; 15,000 b. 10,000 ; 6,000 ; 15,000
c. 10,000 ; 15,000 ; 6,000 **d. 15,000 ; 10,000 ; 6,000**
e. விடை தெரியவில்லை

44. The volume of container is 1440 $m^3$. The length and breadth of the container are 15 m and 8 m respectively. Find its height.

a. 23 m b. 7 m **c. 12 m** d. 40 m e. Answer not known

ஒரு பாத்திரத்தின் கனஅளவு 14440 $மீ^3$. அப்பாத்திரத்தின் நீளம் மற்றும் அகலம் முறையே 15 மீ மற்றும் 8 மீ எனில் அதன் உயரத்தைக் காண்.

a. 23 மீ b. 7 மீ c. 12 மீ d. 40 மீ e. விடை தெரியவில்லை

45. If the base area of a hemispherical solid is1386 sq.meters, then find its total surface area?

a. 1386 $m^2$ **b. 4158 $m^2$** c. 2772 $m^2$
d. 5544 $m^2$ e. Answer not known

ஒரு திண்ம அரைக்கோளத்தின் அடிப்பரப்பு 1386 சதுர மீட்டர் எனில், அதன் மொத்தப் புறப்பரப்பைக் காண்க.

a. 1386 ச.மீ b. 4158 ச.மீ c. 2772 ச.மீ
d. 5544 ச.மீ e. விடை தெரியவில்லை

46. In a single throw of a die, what is the probability of getting a prime number?

a. 1 **b.** $\frac{1}{2}$ c. $\frac{2}{3}$ d. 0 e. Answer not known

ஒரு பகடை உருட்டப்படும் பொழுது பகடையின் முக எண். பகா எண்ணாக இருக்க நிகழ்தகவு யாது?

a. 1 **b.** $\frac{1}{2}$ c. $\frac{2}{3}$ d. 0 e. விடை தெரியவில்லை

47. The difference between simple interest and compound interest for a sum of Rs. 10,000 lent at 8% P.A. in 2 years.

**a. Rs. 64** b. Rs. 68 c. Rs. 70 d. Rs. 72 e. Answer not known

ரூ. 10,000க்கு 8% ஆண்டு வட்டி வீதம் எனில், இரண்டு ஆண்டுகளில் கிடைக்கும் கூட்டு வட்டிக்கும் தனிவட்டிக்கும் உள்ள வித்தியாசம்

**a. Rs. 64** b. Rs. 68 c. Rs. 70 d. Rs. 72 e. விடை தெரியவில்லை

48. A sum of 48,000 was lent out at simple interest and at the end of 2 years and 3 months that total amount was Rs. 55,560. Find the rate of interest per year.

a. 5% b. 6% **c. 7%** d. 8% e. Answer not known

கடனாக வழங்கப்பட்ட அசல் ரூ. 48,000க்கு 2 ஆண்டுகள் 3 மாதக் காலத்திற்குப் பின் தனிவட்டி மூலம் பெறப்பட்ட மொத்தத் தொகை ரூ. 55,560 ஆக இருந்தது எனில், வட்டி வீதத்தை காண்க.

a. 5% b. 6% **c. 7%** d. 8% e. விடை தெரியவில்லை

49. In an ordinary year find the simple interest on Rs. 900 for 73 days at 8% p.a.
a. Rs. 14.40 **b. Rs. 15.50** c. Rs. 15.40
d. Rs. 14.50 e. Answer not known
ஒரு சாதாரண ஆண்டுக்கு 8% வட்டி வீதத்தில் ரூ.900-க்கு 73 நாட்களுக்கு கிடைக்கும் தனிவட்டி காண்க.
a. Rs. 14.40 **b. Rs. 15.50** c. Rs. 15.40
d. Rs. 14.50 e. விடை தெரியவில்லை

50. The Car that I own can go 150 km with 25 litres of petrol. Then the number of kilometers it can go with 30 litres of petrol is
a. 160 km **b. 180 km** c. 200 km
d. 210 km e. Answer not known
எனது மகிழுந்தில் 25 லிட்டர் பெட்ரோல் கொண்டு 150 கி.மீ போக முடியும் எனில் 30 லிட்டர் பெட்ரோலில் பயணிக்கப்படும் தூரம்.
a. 160 கி.மீ b. 180 கி.மீ c. 200 கி.மீ
d. 210 கி.மீ e. விடை தெரியவில்லை

51. If $\frac{15}{25}=\frac{x}{5}=\frac{18}{y}$ then the value of x and y is
**a. 3, 30** b. 3,35 c. 5,30 d. 5, 35 e. Answer not known
$\frac{15}{25}=\frac{x}{5}=\frac{18}{y}$ எனில் x மற்றும் y – ன் மதிப்புகள்
a. 3, 30 b. 3,35 c. 5,30 d. 5, 35 e. விடை தெரியவில்லை

52. The LCM of ( 5x-10), ( $5x^2$ – 20) is
**a. 5(x+2) ( x-2)** b. 25(x+2)(x-2) c. 25( x-2)$^2$ (x+2)
d. 5(x-2)$^2$ (x+2) e. Answer not known
( 5x-10), ( $5x^2$ – 20) இவற்றின் மீ.பொ.ம.
**a. 5(x+2) ( x-2)** b. 25(x+2)(x-2) c. 25( x-2)$^2$ (x+2)
d. 5(x-2)$^2$ (x+2) e. விடை தெரியவில்லை

53. The LCM of ( $x^4$-1), ( $x^2$-2x+1) is
a. (x-1)(x+1)( $x^2$+1) **b. ($x^2$+1) (x+1) (x-1)$^2$** c. ($x^2$+1)(x-1)$^3$(x+1)
d. ($x^2$+1) (x-1) e. Answer not known
( $x^4$-1), ( $x^2$-2x+1) இவற்றின் மீ.பொ.ம
a. (x-1)(x+1)( $x^2$+1) **b. ($x^2$+1) (x+1) (x-1)$^2$** c. ($x^2$+1)(x-1)$^3$(x+1)
d. ($x^2$+1) (x-1) e. விடை தெரியவில்லை

54. Find out the HCF of 11, 0.121 and 0.1331
a. 11 b. 0.11 c. 0.011 **d. 0.0011** e. Answer not known
11, 0.121 மற்றும் 0.1331-ன் மீ.பொ.வ. காண்க.
a. 11 b. 0.11 c. 0.011 **d. 0.0011** e. விடை தெரியவில்லை

55. Find the HCF of the polynomials $x^3$+ $x^2$-x+2 and 2 $x^3$-5 $x^2$+5x – 3.
a. x+2 b. 2($x^3$+ $x^2$-x+2) c. -7( $x^2$ – x+1)
**d. $x^2$ – x+ 1** e. Answer not known
$x^3$+ $x^2$-x+2 மற்றும் 2 $x^3$-5 $x^2$+5x – 3 ஆகிய பல்லுறுப்புக் கோவைகளின் மீ.பொ.வ.காண்க.
a. x+2 b. 2($x^3$+ $x^2$-x+2) c. -7( $x^2$ – x+1)
**d. $x^2$ – x+ 1** e. விடை தெரியவில்லை

56. Express the following into percentage: 200 ml in 2 litres
**a. 10%** b. 2% c. 20 % d. 100% e. Answer not known
சதவீதத்தில் மாற்றுக: 2 லிட்டரில் 200 மி.லி.
**a. 10%** b. 2% c. 20 % d. 100% e. விடை தெரியவில்லை

57. If $\frac{x}{y} = \frac{6}{5}$, find the value of $\frac{x^2 + y^2}{x^2 - y^2}$
a. $\frac{61}{25}$ b. $\frac{25}{11}$ **c.** $\frac{61}{11}$ d. $\frac{36}{25}$ e. Answer not known
$\frac{x}{y} = \frac{6}{5}$ எனில் $\frac{x^2 + y^2}{x^2 - y^2}$ ன் மதிப்பு காண்க.
a. $\frac{61}{25}$ b. $\frac{25}{11}$ **c.** $\frac{61}{11}$ d. $\frac{36}{25}$ e. விடை தெரியவில்லை

58. Mental inertia and dogmatism are the harmful disadvantages of
a. Generalization b. Scientific method c. Inductive thinking
**d. Empirical thinking** e. Answer not known
மன நிலைமம், தன்முனைப்பு - இவையிரண்டும் ______________ ன் தீங்கு விளைவிக்கும் குறைபாடுகள்.
a. பொதுமைப்படுத்துதல் b. அறிவியல் முறை c. தூண்டல் சிந்தனை
d. அனுபவ சிந்தனை e. விடை தெரியவில்லை

59. Let the boiling temperature of water in a pressure cooker be T. Then
a. T= 80° C b. T= 90° C c. T= 100° C
**d. T> 100° C** e. Answer not known
அழுத்தச் சமைப்பானில் நீரின் கொதிநிலை வெப்பநிலை T என்க. அப்போது,
a. T= 80° C b. T= 90° C c. T= 100° C
**d. T> 100° C** e. விடை தெரியவில்லை

60. The Zig – Zag movement of colloidal particles of cytoplasmic matrix is called
a. Streaming Movement b. Amoeboid movement **c. Brownian movement**
d. None of the above e. Answer not known
சைட்டோபிளாசத்தின் கூழ்நிலைப்பொருள் வளைந்து வளைந்து செல்லும் நகர்வின் பெயர்
a. ஸ்டீரிமிங் நகர்வு b. அமீபாய்டு நகர்வு c. ப்ரௌணியன் நகர்வு
d. இவை எதுவும் இல்லை. e. விடை தெரியவில்லை

61. Assertion: A refrigerator transfers heat from lower temperature to higher temperature
Reason: Normally heat cannot be transferred from lower temperature to higher temperature without doing any external work.
a. Both Assertion and reason are true and reason is the correct explanation of assertion.
**b. Both assertion and reason are true but the reason is not the correct explanation of the assertion**
c. Assertion is true but the reason is false
d. Assertion is false but the reason is true
e. Answer not known

கூற்று: ஒரு குளிர்சாதன பெட்டி, குறைவான வெப்பநிலையிலிருந்து அதிகப்படியான வெப்ப நிலைக்கு வெப்பத்தை கடத்துகிறது.

காரணம்: எந்த ஒரு புற வேலையும் செய்யாமல் சாதாரணமாக வெப்பம் குறைந்த வெப்பநிலையிலிருந்து அதிகப்படியான வெப்ப நிலைக்கு வெப்பத்தை கடத்துகிறது.

a. கூற்று சரி காரணம் சரி. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்
b. கூற்று மற்றும் காரணம் சரி ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல
c. கூற்று சரி ஆனால் காரணம் தவறு
d. கூற்று தவறு ஆனால் காரணம் சரி
e. விடை தெரியவில்லை

62. Life is a physico chemical entity which exhibits
a. Reproduction b. Irritability c. Locomotion
**d. All the above** e. Answer not known
உயிர் ஒரு இயற்பியல் - வேதியியல் தொகுப்பு. இவ்வுயிரி கொடுக்கப்பட்டவைகளில் எதை வெளிப்படுத்துகிறது?
a. இனப்பெருக்கம் b. உறுத்துணர்ச்சி c. இடப்பெயர்ச்சி
d. இவை அனைத்தும் e. விடை தெரியவில்லை.

63. Food cooks faster in a pressure cooker than in an ordinary pot with a loose lid because the higher pressure.
a. forces heat into the food more rapidly b. lowers the boiling point of water
**c. Raises the boiling point of water** d. Increases the specific heat capacity of water
e. Answer not known
தளர்வான மூடியுடைய சாதாரணப் பானையில் உணவு சமைப்பதை விட அழுத்தச் சமையற்கலனில் விரைவாக சமைக்கப்படுகிறது ஏனெனில் அதிக அழுத்தம்
a. உணவின் மீது வெப்பத்தை விரைவாகச் செலுத்தும்
b. நீரின் கொதிநிலையைக் குறைக்கும்
c. நீரின் கொதிநிலையை அதிகரிக்கும்
d. நீரின் தன் வெப்ப ஏற்புத்திறனை அதிகரிக்கும்
e. விடை தெரியவில்லை

64. The control and co- ordination of our body is under the control of _____________ system.
a. Circulatory system b. Reproductive system c. Digestive system
**d. Nervous system** e. Answer not known
நம் உடலின் ஒருங்கிணைந்த செயல்பாட்டுக்கும், கட்டுப்பாட்டிற்கும் காரணமான மண்டலம்
a. இரத்த ஓட்ட மண்டலம் b. இனப்பெருக்க மண்டலம் c. சீரண மண்டலம்
d. நரம்பு மண்டலம் e. விடை தெரியவில்லை

65. A perfectly black body is that which
a. is totally black in colour b. can radiate all its energy
c. is made of ideal gas **d. absorbs all the radiations incident on it**
e. Answer not known
ஒரு முழுமையான கரும்பொருள் என்பது
a. முழுவதும் கருப்பு நிறத்திலானது
b. அதன் அனைத்து ஆற்றலையும் கதிர்வீச்சு முறையில் வெளியிடும்
c. லட்சிய வாயுவால் ஆனது
d. அதன்மேல்படும் அனைத்து கதிர்வீச்சுக்களையும் கிரகித்துக் கொள்ளும்
e. விடை தெரியவில்லை

66. _________ is the second largest State in India on account of its size.
a. Tamil Nadu b. Uttar Pradesh c. West Bengal
**d. Madhya Pradesh** e. Answer not known
_________ பரப்பளவில் இரண்டாவது பெரிய இந்திய மாநிலமாகும்.
a. தமிழ்நாடு b. உத்திரப்பிரதேசம் c. மேற்கு வங்காளம்
d. மத்தியப் பிரதேசம் e. விடை தெரியவில்லை

67. The place where ISRO successfully tested the first human carrying rocket engine Vikas (Gaganyan -human space mission) is
**a. Mahendragiri – TN** b. Kalpakkam – TN c. Koodangulam – TN
d. Narimanam – TN e. Answer not known
மனிதனை ஏற்றிச் செல்லும் முதல் ராக்கெட் விகாஸ் இன்ஜினை இஸ்ரோ வெற்றிகரமாகச் சோதித்த இடம் (சுகன்யான் மனித விண்வெளிப் பயண திட்டம்) _________ ஆகும்.
a. மகேந்திரகிரி – தமிழ்நாடு b. கல்பாக்கம் - தமிழ்நாடு
c. கூடங்குளம் - தமிழ்நாடு d. நரிமணம் - தமிழ்நாடு
e. விடை தெரியவில்லை.

68. The Ecological conservation strategy “Meendum Manjappai” Scheme was introduced by the Chief Minister M.K.Stalin on
a. 15th December 2021 b. 20th December 2021 c.25th December 2021
**d. 23rd December 2021** e. Answer not known
சுற்றுச்சூழல் பாதுகாப்பு வழிமுறைக்கான “மீண்டும் மஞ்சப்பை” திட்டம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட நாள்
a. 15 டிசம்பர் 2021 b. 20 டிசம்பர் 2021 c. 25 டிசம்பர் 2021
d. 23 டிசம்பர் 2021 e. விடை தெரியவில்லை

69. Maximum punishment in Juvenile Justice Act.
a. Imprisonment for life or upto 11 years and fine
b. Imprisonment upto 10 years or fine
**c. Imprisonment for life or upto 10 years and fine**
d. Imprisonment for life or upto 8 years and fine
e. Answer not known
சிறார் நீதிச் சட்டத்தில் அதிகபட்ச தண்டனை யாவை?
a. ஆயுள் தண்டனை அல்லது 11 ஆண்டுகள் மற்றும் அபராதம்
b. 10 ஆண்டுகள் வரை சிறை தண்டனை அல்லது அபராதம்
c. ஆயுள்தண்டனை அல்லது 10 ஆண்டுகள் மற்றும் அபராதம்
d. ஆயுள் தண்டனை அல்லது 8 ஆண்டுகள் மற்றும் அபராதம்
e. விடை தெரியவில்லை

70. The capital of British India was shifted from Calcutta to Delhi in the year
a. 1907 **b. 1911** c. 1912 d. 1913 e. Answer not known
கல்கத்தாவிலிருந்து டெல்லியை பிரிட்டிஷ் இந்தியாவின் தலைநகரமாக மாற்றப்பட்ட ஆண்டு
a. 1907 **b. 1911** c. 1912 d. 1913 e. விடை தெரியவில்லை

71. Which of the following is incorrectly paired?
1. CACP - Commission for Agricultural Cost and Prices
2. ICDS -Integrated Child Development Services.
3. NFSA -National Food Security Association
4. MDM - Mid Day Mission
a. 1 and 2 only b. 1 and 3 only c. 2 and 3 only

**d. 3 and 4 only** e. Answer not known

பின்வருவனவற்றில் எது தவறாக இணைக்கப்பட்டுள்ளது?

1. CACP - விவசாய செலவு மற்றும் விலை குழு
2. ICDS - ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டு சேவைகள்
3. NFSA - தேசிய உணவு பாதுகாப்பு சங்கம்
4. MDM - மதிய நாள் பணி

a. 1 மற்றும் 2 மட்டும் b. 1 மற்றும் 3 மட்டும் c. 2 மற்றும் 3 மட்டும்
**d. 3** மற்றும் 4 மட்டும் e. விடை தெரியவில்லை

72. The start-ups under the "Big Privatization Push" after the waves of Covid 19 Pandemic are called

a. Small units **b. Unicorns** c. Private Players
d. Infant firms e. Answer not known

Covid 19 பரவலுக்குப் பிறகு "பெரிய தனியார்மயமாக்கல் உந்துதல்" உருவாகிய தொழிற்சாலைகளின் பெயர்

a. சிறுதொழில் நிறுவனம் b. யூனிகார்ன் c. தனியார் தொழிலாளர்
d. குழந்தை நிறுவனம் e. விடை தெரியவில்லை

73. The period which witnessed rapid urbanization in India is

a. 1901-1931 b. 1931-1961 c. After 1961
d. Before 1901 e. Answer not known

இந்தியாவில் நகரமயமாக்கல் துரிதமாக காணப்பட்ட காலம்

a. 1901-1931 b. 1931-1961 c.1961 க்கு பிறகு
d. 1901-க்கு முன்பு e. விடை தெரியவில்லை

74. Which crop requires maximum water for cultivation?

a. Barley b. Maize **c. Sugarcane**
d. Wheat e. Answer not known

வேளாண் நடவடிக்கைகளுக்கு அதிக அளவில் நீர் தேவைப்படும் ஒரு பயிர்

a. பார்லி b. மக்காச்சோளம் c. கரும்பு
d. கோதுமை e. விடை தெரியவில்லை

75. It is a species of the broad leaved forests

a. Deodar b. Fir c. Spruce
**d. Rosewood** e. Answer not known

பரந்த இலைக் காடுகளின் இனங்களில் வருவது

a. டியோடர் b. ஃபிர் c. ஸ்புரூஸ்
d. ரோஸ்வுட் e. விடைதெரியவில்லை

76. Which of the following rivers is known as the "Ganges of South India"?

a. Kauvery b. Krishna **c. Godavari**
d. Narmada e. Answer not known

கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆறுகளில் "தென் இந்தியாவின் கங்கை" என்று அழைக்கப்படுவது எது?

a. காவேரி b. கிருஷ்ணா c. கோதாவரி
d. நர்மதை e. விடை தெரியவில்லை

77. Which winds provide heavy rainfall to the east part of Tamil Nadu?

a. Westerlies winds b. South – West winds **c. North – East dry winds**
d. North – East cold winds e. Answer not known

தமிழ்நாட்டின் கிழக்கு பகுதிகளுக்கு அதிக அளவிலான மழைப் பொழிவினை கொடுக்கும் காற்றுகள் எவை?
a. மேற்கத்திய காற்றுகள் b. தென்மேற்கு காற்றுகள்
c. வடகிழக்கு வறண்ட காற்றுகள் d. வடகிழக்கு குளிர்ந்த காற்றுகள்
e. விடை தெரியவில்லை

78. Shivaji maintained a Naval fleet at
a. Salsettle **b. Kolaba** c. Bassein
d. Kalyan e. Answer not known
சிவாஜி எங்கு கடற்படை தளத்தை நிறுவி இருந்தார்?
a. சால்ஷெட்லே b. கோலாபா c. பேஸீன்
d. கல்யாண் e. விடை தெரியவில்லை

79. Name the Sikh Guru who founded the holy city of Amritsar?
a. Guru Govind b. Guru Nanak **c. Guru Ram Das**
d. Guru Tegh Bahadur e. Answer not known
சீக்கியர்களின் புனித தலமான அமிர்தரஸை நிறுவிய சீக்கிய குருவின் பெயரைக் குறிப்பிடுக.
a. குரு கோவிந்த் b. குரு நானக் c. குரு ராம் தாஸ்
d. குரு தேக் பகதூர் e. விடை தெரியவில்லை

80. During the Maratha rule, the revenue of the state came mainly from
**a. Land** b. Trade c. Fine
d. Transport e. Answer not known
மராத்தியர் ஆட்சியில் நாட்டின் முக்கிய வருவாய் எதிலிருந்து பெறப்பட்டது?
a. நிலம் b. வணிகம் c. அபராதம்
d. போக்குவரத்து e. விடை தெரியவில்லை

81. Name the persian scholar who was chosen as Akbar's tutor
**a. Abdul Latif** b. Abdul Salam c. Abdul Samad
d. Abdul Rahim e. Answer not known
அக்பரின் ஆசிரியராக தேர்வு செய்யப்பட்ட பாரசீக அறிஞரின் பெயர்
a. அப்துல் லத்தீப் b. அப்துல் சலாம் c. அப்துல் சமது
d. அப்துல் ரஹீம் e. விடை தெரியவில்லை

82. Name the author of Brihat Samhita:
**a. Varahamihira** b. Dandin c. Buddha Gupta
d. Amar Singh e. Answer not known
'பிரிகத் சம்ஹிதா' என்னும் நூலின் ஆசிரியர்
a. வராகமிஹிரர் b. தண்டின் c. புத்த குப்தர்
d. அமர்சிங் e. விடை தெரியவில்லை

83. Assertion (A): Zafar Khan the right wing commander of Ala-ud-din was killed by Mangols
Reason (R) :Ulugh Khan, the left wing commander deserted him
a. A is right R is wrong b. Both A and R are right
c. A is wrong R is right **d. Both A and R are right, R is the correct explanation of A**
e. Answer not known
கூற்று(A): அலாவுதீனின் வலது சாரி தலைவர் சாபர்கான் மங்கோலியர்களால் கொல்லப்பட்டார்.
காரணம்(R): இடது சாரி தலைவரான உலுக்கான் அவரை கைவிட்டு விட்டார்.
a. A சரி R தவறு b. A R இரண்டும் சரி c. A தவறு R சரி
d. A R இரண்டும் சரி R A யின் சரியான விளக்கம் ந. விடை தெரியவில்லை

84. Which of the following was the Port City of Indus Valley Civilisation?
**a. Lothal** b. Harappa c. Kalibangan
d. Larkana e. Answer not known
பின்வருவனவற்றுள் சிந்து சமவெளி நாகரிகத்தின் துறைமுக நகரம் எது?
a. லோத்தல் b. ஹரப்பா c. களிபங்கன்
d. லர்கானா e. விடை தெரியவில்லை

85. Match the following:
A. Aryabatta — 1. Mathematician
B. Nagarjuna — 2. Jain Scholar
C. Siddhar Sena — 3. Buddhist Scholar
D. Vira Sena Seva — 4. Grammar Scholar

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 3 | 2 |
| **b.** | **1** | **3** | **2** | **4** |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. Answer not known
கீழ்கண்டவற்றை பொருத்துக.
A. ஆரியபட்டா — 1. கணித மேதை
B. நாகர்ஜுனா — 2. ஜைன புலவர்
C. சித்த சேனர் — 3. புத்த புலவர்
D. வீர சேன சேவா — 4. இலக்கண புலவர்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 3 | 2 |
| **b.** | **1** | **3** | **2** | **4** |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

86. Right to Information Act came into force on
a. 22 June 2005 **b. 12 October 2005** c. 15 June 2005
d. 15 August 2005 e. Answer not known
தகவல் அறியும் உரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்த ஆண்டு.
a. 22 ஜுன் 2005 b. 12 அக்டோபர் 2005 c. 15 ஜுன் 2005
d. 15 ஆகஸ்ட் 2005 e. விடை தெரியவில்லை

87. Which of the following subject comes under the Central Government?
**a. Banking** b. Agriculture c. Prison
d. Public Health e. Answer not known
மத்திய அரசாங்கத்தின் கீழ் வரக்கூடிய துறைகள் எது?
a. வங்கித்துறை b. விவசாயம் c. சிறைத்துறை
d. பொது உடல்நலன் e. விடை தெரியவில்லை

88. A Lok Sabha speaker addresses his / her resignation to whom among the following
**a. Deputy Speaker** b. President c. Prime Minister
d. Law Minister e. Answer not known

கீழ்க்கண்டவற்றுள் லோக்சபா சபாநாயகர் தனது ராஜினாமாவை எவரிடம் அளிப்பார்?
a. துணை சபாநாயகர் b. குடியரசுத் தலைவர் c. பிரதமர்
d. சட்ட அமைச்சர் e. விடை தெரியவில்லை

89. The RTI Act of 2005 has ________________ schedules
a. 5 Schedules b. 10 Schedules **c. 2 Schedules**
d. 8 Schedules e. Answer not known
2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம் __________ அட்டவணைகள் கொண்டதாகும்.
a. 5 பகுதிகள் b. 10 பகுதிகள் c. 2 பகுதிகள்
d. 8 பகுதிகள் e. விடை தெரியவில்லை

90. Match the following terms with their meanings:

| | |
|---|---|
| A. Adjournment Sine Die | 1. Minimum number of members required to be present in the House to transact business |
| B. Quorum | 2. Last sitting of existing Lok Sabha, after a new Lok Sabha has been elected |
| C. Kangaroo closure | 3. Terminating a sitting of Parliament for an indefinite period |
| D. Lame – Duck Session | 4. Only important clauses are taken up for debate |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 2 | 4 |
| b. | 1 | 3 | 2 | 4 |
| **c.** | **3** | **1** | **4** | **2** |
| d. | 2 | 3 | 4 | 1 |
| e. | Answer not known | | | |

கீழ்க்காணப்படும் சொற்களை அதன் அர்த்தத்துடன் பொருத்தவும்:

| | |
|---|---|
| A. ஒத்தி வைப்பு | 1. அவையை நடத்த தேவையான உறுப்பினர் எண்ணிக்கை |
| B. குவாரம் | 2. புது மக்களவை தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு கடைசியான பழைய மக்களவை அமர்வு |
| C. கங்காரு மூடல் | 3. பாராளுமன்றத்தை காலவரையற்று ஒத்தி வைத்தல் |
| D. லேம்டக் அமர்வு | 4. முக்கியமான உட்கூறுகளை மட்டும் விவாதிப்பது |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 2 | 4 |
| b. | 1 | 3 | 2 | 4 |
| **c.** | **3** | **1** | **4** | **2** |
| d. | 2 | 3 | 4 | 1 |
| e. | விடை தெரியவில்லை | | | |

91. Right to Information Act, 2005 provided an effective frame work to ____________ article of the Indian Constitution.
a. Article 9 **b. Article 19** c. Article 29
d. Article 30 e. Answer not known
தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 இந்திய அரசியலமைப்பின் ___________ விதிக்கு ஒரு சிறந்த கட்டமைப்பை வழங்குகிறது.
a. விதி 9 b. விதி19 c. விதி 29
d. விதி 30 e. விடை தெரியவில்லை

92. How often in a year, the Central Consumer Protection Council should meet?
**a. Once in a year** b. Twice in a year c. As and when necessary
d. Every month e. Answer not known
மத்திய நுகர்வோர் பாதுகாப்பு குழு கூட்டம் வருடத்திற்கு எத்தனை முறை நடத்தப்பட்ட வேண்டும்?
a. ஒரு முறை b. இரண்டு முறை c. தேவை ஏற்படும்போதெல்லாம்
d. ஒவ்வொரு மாதமும் e. விடை தெரியவில்லை

93. Consider the following statements about the preamble.
1. Jawaharlal Nehru called it as the "Identity Card of the Constitution".
2. It reveals the source of authority of the Constitution
3. It reveals the nature of Indian State.
4. It reveals the objectives of the Indian Constitution
Which of the given statements is / are wrong?
a. 1 and 2 **b. 1 only** c. 2 only
d. 3 and 4 e. Answer not known
1. ஜவஹர்லால் நேரு அவர்கள் இதனை "அரசியல் சாசனத்தின் அடையாள அட்டை" என்று கூறினார்.
2. இது அரசியல் சாசனத்தின் அதிகாரத்தை வெளிப்படுத்துகிறது
3. இந்திய நாட்டின் தன்மையை வெளிப்படுத்துகிறது
4. இந்திய அரசியல் சாசனத்தின் கொள்கைகளை வெளிப்படுத்துகிறது.
மேலே காணப்படும் வாக்கியங்களில் எது/எவை தவறானவை?
a. 1 மற்றும் 2 b. 1 மட்டும் c. 2 மட்டும்
d. 3 மற்றும் 4 e. விடை தெரியவில்லை

94. Who is the first Vice – chairman of NITI Aayog?
**a. Arvind Panagariya** b. V.K. Saraswat c. Rajnath Singh
d. Arun Jaitely e. Answer not known
நிதி ஆயோக்கின் முதல் துணைத் தலைவர் யார்?
a. அரவிந்த் பணகாரியா b. V.K. சரஸ்வத் c. ராஜ்நாத் சிங்
d. அருண் ஜெட்லி e. விடை தெரியவில்லை

95. Main functions of Reserve Bank of India is / are
1. Bank of issue of Notes 2. Safety locker
3. Letter of Credit 4. Banker's Bank
Select the correct answer by using the codes given below
**a. 1 and 4 are correct** b. 1 and 2 are correct c. 2 and 3 are correct
d. 3 and 4 are correct e. Answer not known
இந்திய ரிசர்வ் வங்கியின் முக்கிய பணிகள்
1. பணம் வெளியிடுதல் 2. பாதுகாப்பு பெட்டகம்
3. கடன் கடிதம் 4. வங்கிகளின் வங்கி
குறியீடுகள் மூலம் சரியான விடையை தெரிவு செய்க.
a. 1 மற்றும் 4 சரியானவை b. 1 மற்றும் 2சரியானவை c. 2 மற்றும்3 சரியானவை
d. 3 மற்றும் 4 சரியானவை e.விடை தெரியவில்லை

96. "By giving relief to states immediately, the debt burden of states will become moderate in future" is quoted by
a. Dr. Manmohan Singh **b. Dr.C.Rangarajan** c. Dr. Srivastava
d. T.R. Prasad e. Answer not known

“மாநிலங்களுக்கு உடனடியாக கடன் நிவாரணம் வழங்குவதன் மூலம், மாநிலங்களின் எதிர்கால கடன் சுமை மிதமானதாக இருக்கும்” இது யாருடைய கூற்று?

a. Dr. மன்மோகன் சிங் b. Dr.C. ரெங்கராஜன் c. Dr. ஸ்ரீவஸ்தவா

d. T.R. பிரசாத் e. விடை தெரியவில்லை

97. Which one of the following is not an employment generation programme?

a. Rural Employment Generation Programme ( REGP)

b. Prime Minister's Rozgar Yojana ( PMRY)

c. National Food for Work Programme ( NFWP)

**d. Jandhan Yojana**

e. Answer not known

பின்வருவனவற்றுள் எது வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் இல்லை?

a. ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (REGP)

b. பிரதமர் வேலைவாய்ப்புத் திட்டம் (PMRY)

c. தேசிய வேலைக்கு உணவுத் திட்டம்( NFWP)

d. ஜந்தன் திட்டம்

e. விடை தெரியவில்லை

98. Which organization collects data on Poverty in India?

a. Planning commission **b. NSSO- National Sample Survey Organisation**

c. CSO – Central Statistics Office d. Election Commission

e. Answer not known

இந்தியாவில் வறுமை பற்றிய புள்ளி விவரங்களைத் திரட்டும் நிறுவனம் எது?

a. திட்டக்குழு

b. NSSO (தேசிய மாதிரி ஆய்வு அலுவலகம்)

c. CSO- (மத்திய புள்ளியியல் அலுவலகம்)

d. தேர்தல் ஆணையம்

e. விடை தெரியவில்லை

99. Identify the sectors of the Indian Economy which are the most affected the Covid Pandemic

1. MSME Sector 2. Aviation Sector

3. Tourism and hospitality Sector 4. Telecommunication sector

a. 3 and 4 only b. 1 and 2 only c. 1 and 4 only

**d. 1,2 and 3 only** e. Answer not known

கோவிட் தொற்றுக் காலத்தில் இந்தியப் பொருளாதாரத்தில் மிகுதியாக பாதிக்கப்பட்ட துறைகள் அடையாளம் காண்க.

1. MSME துறை 2. விமானத்துறை

3. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறை 4. தொலைத் தொடர்புத் துறை

a. 3 மற்றும் 4 மட்டும் b. 1 மற்றும் 2 மட்டும் c.1 மற்றும் 4 மட்டும்

d. 1, 2 மற்றும் 3 மட்டும் e. விடை தெரியவில்லை

100. Which of the following is / are not part of the agricultural price policy?

1. To improve technology for higher production

2. To help the distribution of land

3. To fix the procurement prices

4. To manage public distribution system

Select the correct answers by using the codes given below:

a. 1 only **b. 2 only** c. 1, 2 and 3

d. 1,3 and 4 e. Answer not known

கீழ் குறிப்பிட்டதில் எது வேளாண் விலைக் கொள்கையின் முக்கிய நோக்கங்களில் குறிப்பிடாதது?

1. அதிக உற்பத்திக்கு தொழில் நுட்பத்தை உயர்த்துவது
2. நிலப் பகிர்வுக்கு உதவுவது
3. கொள்முதல் விலையை நிர்ணயம் செய்தல்
4. பொதுப் பகிர்வு முறையை மேலாண்மை செய்தல்

குறியீடுகள் மூலம் சரியான விடை காண்க

a. 1 மட்டும்
b. 2 மட்டும்
c. 1, 2 மற்றும் 3
d. 1, 3 மற்றும் 4
e. விடை தெரியவில்லை